# கொரோனா விழிப்புணர்வு துண்டு பிரசுரம் வழங்கல்



லாஸ்பேட்டை தொகுதி பொதுமக்களுக்கு கொரோனா விழிப்புணர்வு துண்டு பிரசுரத்தை சபாநாயகர் சிவக்கொழுந்து வழங்கினார். அருகில் நகராட்சி ஆணையர் கந்தசாமி.

புதுச்சேரி, மார்ச் 21: உழவர்கரை நகராட்சி மூலம் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவுவதை தடுக்க பல்வேறு சுகாதார நடவடிக்கைகளும், விழிப்புணர்வு பிரசாரங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் ஒரு பகுதியாக, உழவர்கரை நகராட்சிக்கு உட்பட்ட லாஸ்பேட்டை தொகுதியில் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கல் மற்றும் கிருமிநாசினி தெளிக்கும் பணி நடந்தது.

இதில் சபாநாயகர் சிவக்கொழுந்து கலந்து கொண்டு பொதுமக்களுக்கு கொரோனா விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார். தொடர்ந்து, ஆட்டோக்கள் மற்றும் பேருந்துகளில் கிருமிநாசினி தெளிக்கும் பணியையும் தொடங்கி வைத்தார். அதன் பின்னர், உழவர்கரை நகராட்சி ஆணையர் கந்தசாமி, மருத்துவ அதிகாரி நவ்ஷத் அலி, இளநிலை பொறியாளர் சிவக்குமார், சுகாதார மேற்பார்வையாளர் தங்கமுடி பாண்டியன் தலைமையில் இப்பணியை ஊழியர்கள் செய்தனர்.

# தாகூர் கலைக் கல்லூரி, ஹெலிபேட் மைதானங்களில் விளையாட வர வேண்டாம்

- சிறுவர்களுக்கு லாஸ்பேட்டை போலீஸார் அறிவுறுத்தல்

**புதுச்சேரி**

கரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக லாஸ்பேட்டை தாகூர் கலைக் கல்லூரி மைதானம், ஹெலிபேட் மைதானங்களில் விளையாட வர வேண்டாம் என்று லாஸ்பேட்டை போலீஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

கரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக சுற்றுலா நகரமான புதுச்சேரியில் மக்கள் கூடும் இடங்களான பூங்காக்கள், படகு குழாம், திரையரங்குகள், கல்விக் கூடங்கள் என முக்கிய இடங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. மேலும் பல்வேறு முக்கிய கோயில்களிலும் இருமல், சளியுடன் வரவேண்டாம் எனவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மது பானக்கடைகளும் மூடப்பட் டுள் ளன. பொதுமக்கள் கூட்டமாக கூட வேண்டாம் எனவும் அறிவுறுத் தப்பட்டுள்ளது. இந்நிலையில் இளைஞர்கள், சிறுவர்கள் விளை யாட ஒன்றாக கூடும் புதுச்சேரி லாஸ்பேட்டை தாகூர் கலைக் கல்லூரி மைதானம், ஹெலிபேட் மைதானத்தில் தடை விதித்து போலீஸார் அறிவுறுத்தியுள்ளனர். இதுதொடர்பாக லாஸ்பேட்டை போலீஸார் வெளியிட்டுள்ள அறிவிப்பில், "கரோனா வைரஸ் பரவாமல் தடுக்க மத்திய, மாநில அரசுகள் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு தரும் பொருட்டு லாஸ்பேட்டை பகுதிகளில் இருக்கும் தாகூர் கலைக் கல்லூரி மைதானம் மற்றும் ஹெலிபேட் மைதானங்களில் இளைஞர்கள், சிறுவர்கள் யாரும் வரும் 31-ம் தேதி வரை விளை யாட வர வேண்டாம் என்று இளை ஞர்கள் மற்றும் சிறுவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்படுகிறது" என்று தெரிவித்துள்ளனர்.

# வரி வசூல் சிறப்பு முகாம் ரத்து உழவர்கரை நகராட்சி அறிவிப்பு

**புதுச்சேரி, மார்ச் 21–**

கொரோனா வைரஸ் பாதிப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக உழவர் கரை நகராட்சி மூலம் இன்றும், நாளையும் நடைபெற இருந்த வீட்டு வரி மற்றும் சொத்து வரி வசூல் சிறப்பு முகாம் ரத்து செய்யப் பட்டுள்ளது.

இதுகுறித்து நகராட்சி ஆணையர் கந்தசாமி விடுத்துள்ள செய்திக்குறிப்பு;

உழவர்கரை நகராட்சி வீட்டு வரி மற்றும் சொத்து வரி செலுத்துவோரின் நலன் கருதி இன்று 21ம் தேதி கருவடிக்குப்பம் பாத்திமா மேல்நிலைப் பள்ளியிலும், நாளை 22ம் தேதி முத்தரை யர்பாளையம் முத்தரையர் மேல்நிலைப் பள்ளியிலும் வீட்டு வரி வசூல் சிறப்பு முகாம் நடத்த உத்தேசிக் கப்பட்டது. தற்போது நாடு முழுவதும் கொரோனா வைரஸ் பாதிப்பு உள்ளதால் முன்னெச்சரிக்கை நடவடிக் கையாக வீட்டு வரி மற்றும் சொத்துவரி வசூல் சிறப்பு முகாம்கள் ரத்து செய்யப் படுகிறது.

எனவே கருவடிக்குப் பம் பாரதி நகர், மகாவீர் நகர், சாமிபிள்ளைத்தோட் டம், ரெயின்போ நகர், கிருஷ்ணா நகர், எழில் நகர், வசந்த் நகர், செந் தாமரை நகர், சங்கரதாஸ் சுவாமிகள் நகர் ஆகிய வார்டுகளை சேர்ந்தவர்கள் கிழக்கு கடற்கரை சாலை யில் உள்ள நவீன சுகாதார மீன் அங்காடி வீட்டு வரி வசூல் மையத்தில், வீட்டு வரியை செலுத்தலாம்.

முத்தரையர்பாளையம், தர்மாபுரி, தனபால் நகர், கல்வி நகர், மேரி உழவர் கரை வார்டுகளை சேர்ந்த வர்கள் மேரி உழவர்கரை நகராட்சி அலுவலகத்தில் உள்ள வீட்டு வரி வசூல் மையத்தில் வீட்டு வரியை செலுத்தலாம்.

மேலும் இம்மாதம் முழுவதும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை உட் பட அனைத்து நாட்களி லும் ஜவகர் நகர் நராட்சி தலைமை அலுவலகம், மேரி உழவர்கரை நகராட்சி அலுவலகம், இ.சி.ஆரில் உள்ள நவீன சுகாதார மீன் அங்காடி மற்றும் வி.வி. பி., நகர் வீட்டு வரி வசூல் மையங்கள் காலை 9:00 மணி முதல் மதியம் 1:00 மணி மற்றும் மதியம் 2:00 மணி முதல் மாலை 4.30 மணிவரை இயங்கும்.

மேலும் வீட்டு வரி செலுத்துவோர் ஆன் லைன் மூலம் lgrams.py.gov. in என்ற முகவரியிலும் மற்றும் டெபிட் கார்டு மூலமாகவும் வீட்டு வரி மற்றும் சொத்து வரியை செலுத்தலாம்.

இவ்வாறு செய்திக்கு றிப்பில் கூறப்பட்டுள்ளது.